**Starting time 11.30 A.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 317/2018**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 04.11.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : நடராஜன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : எனக்கு படிக்கத் தெரியுமா என்றால், தெரியும். 2-ஆம் வாதி எனக்கு என்ன உறவு என்றால், பங்காளி ஆவார், எனது உடன் பிறந்தவர் என்றால், ஆமாம். நாங்கள் இருவரும் தனித்தனியாக வழக்கு தாக்கல் செய்யாமல் ஒன்றாக சேர்ந்து தாக்கல் செய்த வழக்கு ஏற்கக்கூடியதல்ல.

2. என்ன பரிகாரம்கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால், தடம் வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளோம். யாருடைய பட்டா எண்ணில் அந்த தடம் போகிறது என்றால், தெரியாது. 100 வருடங்கள் போகிறது. நான் அந்த இடத்தில் எந்த வருடத்தில் சொத்து வாங்கினேன் என்றால், அது என்னுடைய பூர்வீக சொத்து.

3. என்னுடைய வழக்குரையில் பூர்வீக சொத்து என்று சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். 29.06.1999 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின்மூலமாக எனக்கு சொத்து பாத்தியப்பட்டு அனுபவித்து வருகிறேன் என்று கூறியுள்ளேன் என்றால், சரிதான். 2-ஆம் வாதியும், 27.04.2012 தேதியிட்ட கிரயப்பத்திரத்தின் மூலமாகத்தான்

எனக்கு சொத்து பாத்தியப்பட்டது என்றால், அது சித்ராவிடம்தான் கேட்க வேண்டும்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Ending Time: 11.35 A.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.